# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **D.A.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com

இளைய தலைமுறையை முதிய தலைமுறை குறை சொல்வது காலம் காலமாக நடந்து கொண்டு தான் இருக்கிறது. இன்று நடப்புக் காலத்திலும் அது நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தகப்பன்மார்கள் தம் பிள்ளைகளைப் பார்த்து, 'எங்கள் இளம் வயதில் நாங்கள் சிறப்பாக இருந்தது போல் நீங்கள் இல்லை' என்று வீட்டுக்கு வீடு சாடிக் கொண்டு இருக்கிறார்கள். இது காலந்தோறும் நடைபெறுவதுதானே என்று இதை ஒதுக்கவும் முடியவில்லை. காரணம் இன்றைய பிள்ளைகளின் வளம் குறைந்த உடல் நலம், பலம் குறைந்த நினைவாற்றல், கேளிக்கைகளில் நாட்டம், சீக்கிரம் படபடத்து எரிச்சலடையும் பொறுமையின்மை, உழைப்பின் மேல் உள்ள வெறுப்பு, மன அடக்கமின்மை ஆகியவையே.

கடந்த காலத்தைப் பார்க்கும் போது ஒவ்வொரு முதிய தலைமுறைக்கும், அதற்கு அடுத்த இளைய தலைமுறைக்கும் இப்படி ஒரு இடைவெளி சிறிதளவு இருக்கத்தான் செய்திருக்கிறது. ஆனால் நம் தலைமுறையில் இந்த இடைவெளி நம்மையெல்லாம் அதிர வைக்கும் அளவு அதிகமாகி இருக்கிறது. 'எல்லா வீட்டுப்பிள்ளைகளும் இந்த காலத்தில் இப்படித் தான் பெற்றோரை வாதிக்கிறார்கள்' என்று தந்தைமார்களும் தாய்மார்களும் சந்தித்துக் கொள்ளும் போது அங்கலாய்த்துக் கொள்ளும்படியாக இருக்கிறது.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண உளவியல் நிபுணர்கள் முயன்றிருக்கிறனர். மருத்துவர்கள் மருத்துவ ரீதியாக சில ஆலேசனைகளைச் சொல்லுகிறார்கள். ஆனால் இந்தக் கேள்விக்கு பரிபூர்ண விடை கொடுக்க ஆன்மீகத்தால் மட்டுமே முடியும். பழைய புராணங்களையும் இதிகாசங்களை யும் நாம் படிக்கும் அவற்றில் விவரிக்கப்படும் மஹாபுருஷர்களில் இளமைக்காலம் நம்மை ஏக்கத்துக்கு உள்ளாக்குகிறது. அதாவது நம்பிள்ளைகள் இப்படி இல்லையே என்ற மனக்குறைதான். ப்ரஹ்லாதன், ஸ்ரீராமன், ச்ரவணகுமாரன், யுதிஷ்டிரன், ஆகிய இதிகாசநாயகர்கள் தொடங்கி சமீப காலத்திய மராட்டிய சிம்மம் சிவாஜி, ஆன்மீக அடலேறு விவேகானந்தர், தேசீயத்தலைவர் வல்லபபாய்படேல் போன்றோர் வரை சாதனை நாயகர்களாக விளங்கி இருக்கிறார்கள் இவர்களுடைய வெற்றியின் ரகசியம் என்ன? இவர்கள் எல்லோருடைய வாழ்வினும் பொதுவாகக் காணப்படும் ஒரு நெறிமுறை என்ன? சிந்தித்தால் நமக்கே விளங்கும்.

இவர்கள் அனைவரும் பெற்றோரைத் தெய்வமாக மதித்தவர்கள், பெரியவர்களை மரியாதையுடன் பணிந்தவர்கள்! ஏகலைவ்யனுடைய குருபக்தி, படிக்காமலே அவனுக்கு வில்வித்தையைக் கொடுத்தது. ராமானுஜருடைய சீடர் எம்பார் ஒரு பாசுரத்துக்கு விளக்கம் தெரியவில்லை என்ற போது தன் குருவின் பாதுகைகளை தன் தலைமீது சிறிது நேரம் வைத்திருந்து யாரும் சொல்லிக் கொடுக்காமலேயே அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டார். கல்வியைக் கொடுத்த குருவை வணங்கும் போது கல்வி நமக்கு அதிகரிப்பது போல, நம் உடலைக் கொடுத்த நம் பெற்றோரை வணங்கும் போது நமது உடலும், அந்த உடலால் நாம் உலகில் சாதிக்கும் சாதனைகளும் வளப்படுகின்றன. பெற்றோரைப் பணிந்து நாம் பலன் அடைவதன் சூக்கும ரகசியம் இதுதான்.

ஆனால் அந்தக் குணம்தான் இன்றைய பிள்ளைகளுக்கு மிகக் குறைவாக உள்ளது. அதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட காரணங்கள் உள்ளன. முதற்காரணம் 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்று ஆசிரியர் மாணவனுக்கு கற்பித்து ஆசிரியரை வணங்கிப் பணியும் பழக்கத்தை

மாணவருக்கு ஏற்படுத்துவது போல, 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று பிள்ளைகளுக்குப் பெற்றோர் புத்தி புகட்டுவது இல்லை. பாசத்தின் காரணமாக பிள்ளைகளின் கீழ்ப்படியாமையை சகித்துக் கொள்ளுகிறார்கள். இரண்டாவது காரணம் பள்ளிக் கூடங்களில் மூட்டை மூட்டையாக புத்தகங்களைச் சுமக்கவும் ஏட்டுக் கல்வியையும் சொல்லித் தருகிறார்களே தவிர இந்த ஆன்மீகக் கல்வி கற்பிக்கப்படுவதில்லை. சினிமா நட்சத்திரங்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஆகியோருடைய வாழ்க்கை வரலாறு பள்ளிப்பாடத் திட்டத்தில் இடம் பெறும் போது பிள்ளைகளுக்கு அன்னையும் பிதாவும் எப்படி முன்னறி தெய்வமாவார்கள்?

மூன்றாவது காரணத்தை திருவள்ளுவர் கூறுகிறார்: 'தங்கள் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்' என்ற குறள்தான் அதைச் சொல்லுகிறது. பெற்றோர் வாழும் வாழ்க்கை முறை சரியில்லை என்றால் அது பிள்ளைகளின் துர்குணமாகப் பரிணமிக்கும் என்பதுதான் தாத்பரியம். கடந்த ஐம்பதாண்டு காலமாக, நம் சமுதாயம், ஆன்மீகத்தை விட்டு விலகி நாகரீக முன்னேற்றம், விஞ்ஞான முன்னேற்றம், கவர்ச்சிக் கலைகளில் முன்னேற்றம் என்று திசைமாறி பயணித்ததின் விளைவைத்தான் இன்றுநாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இதற்குப் பரிகாரம் நம் கடந்தகால வாழ்க்கை முறைக்கு வருத்தம் தெரிவித்து இறைவனிடம் மன்றாடி மன்னிப்புப் பெறுவதுதான்.

அரசாளும் மன்னன் முதல் அடிமட்டத் தொழிலாளி வரை ஆன்மீகத்தை வழி காட்டியாக வைத்துக் கொண்டு வாழ்ந்த காலம் நம் முன்னோர்கள் காலம். வழக்குகளைத் தீர்க்கும் பஞ்சாயத்துகள் கூட கோவில் தெய்வங்களின் முன் நடை பெற்றன. பொய்ச் சத்தியம் செய்ய மனிதர்கள் அஞ்சினார்கள். ஏழை, பணக்காரன், ஆண், பெண் என்ற பேதமின்றி அனைவர் உள்ளத்திலும் இறை அச்சம் ஆட்கொண்டிருந்தது. சொல்லப்படும் ஒவ்வொரு பொய்யும், செய்யப்படும் ஒவ்வொரு திருட்டும், இழைக்கப்படும் ஒவ்வொரு கொடுமையும், நம்மை இறைவனுடைய அருளிலிருந்து எட்டாத தூரத்துக்கு இட்டுச் சென்றுவிடும் என்ற முன் ஜாக்கிரதை உணர்வு முன்னோர்களுக்கு அதிகம் இருந்தது. அதனால் அவர்களுடைய பிள்ளைகள் நம்மை நம் பிள்ளைகள் கலங்க வைத்தது போல் கண்ணீர் வடிக்க வைக்கவில்லை.

ஆன்மீகம் தான் உலக வாழ்வின் ஜீவநாடி. வியாபாரம் ஆனாலும் அரசாட்சியானாலும், உத்யோகம் ஆனாலும், ஆன்மீகத்துக்கு முக்ய இடம் கொடுக்கப்பட வேண்டும். சோற்றுக்கு ஊறுகாய் போல் ஆன்மீகத்தை நாம் சிறுமைப்படுத்தினால் உலகியல் வாழ்வு நமக்கு பல ப்ரச்சனைகளைத் தான் தரும். ''தர்மோ ரக்ஷதி ரக்ஷித:'' என்று எவ்வளவு அழகாகச் சொன்னார்கள்!'' தர்மத்தை நீ காப்பாற்று! அது உன்னை காப்பாற்றும்'' என்றார்கள். அதை இன்றைய இளைய தலைமுறைக் கல்வியில் கட்டாயப் பாடமாக்க வேண்டும். இளைஞர்களை ஆன்மீக உரைகள் கேட்கும்படிச் செய்ய வேண்டும். அப்படி கேட்டதனால் தான் ஒரு சிவாஜி, ஒரு காந்தி, ஒரு அம்பேத்கார், ஒரு சுபாஷ்சந்திரபோஸ், ஆகியோர் உருவானார்கள். சிற்றின்ப வேட்கையைத் தூண்டும் சினிமாக்கள், சீரியல்கள் அவர்களுக்கு வெகுதூரமாய் இருந்தன. இன்றைய சமுதாயத்தில் நாமோ இப்படிப்பட்ட தீய சக்திகளை, கௌரவமான ஸ்தானம் கொடுத்து வளர விட்டுவிட்டோம். அதன் விளைவுகளால் வேதனைப் படுகிறோம். இதை சிந்தித்தால் நம் சிக்கல்கள் யாவும் தீரும்.

'வாழ்விக்கும் வைணவம்' என்ற தலைப்பில், 2008 மே மாத கீதாசார்யனில், கலப்புத் திருமணங்கள் பற்றி வெளியான கட்டுரை, நம் முன்னோர்கள் நமக்கு ஏற்படுத்தி வைத்த வாழ்க்கை முறையை நாம் மீறக் கூடாது என்பதை வலியுறுத்தும் நோக்கத்தோடு எழுதப்பட்டதே தவிர, தனிப்பட்ட எவருடைய உணர்வுகளை யும் புண்படுத்தும் நோக்கத்தோடு எழுதப்படவில்லை என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

— கட்டுரை ஆசிரியர்.